# கோவில்பட்டி நகராட்சி
# நகர்மன்ற
# சாதாரணக்கூட்டம்

**அன்புடையீர்!**

நிகழும் மங்களகரமான சோபகிருது வருடம் சித்திரை திங்கள்-15. நாள்:-28.04.2023ம் தேதி வெள்ளி கிழமை நண்பகல் 12.00 மணியளவில் நகர்மன்ற கூட்ட அரங்கில் வைத்து நகர்மன்ற சாதாரண கூட்டம் நடைபெற உள்ளது. மேற்படி கூட்டத்தில் அனைத்து நகர்மன்ற உறுப்பினர்களும் தவறாது கலந்துகொள்ள கேட்டுக்கொள்ளப்படுகிறது.

நகர்மன்ற தலைவர்
கோவில்பட்டி நகராட்சி

# கோவில்பட்டி நகராட்சி
# சாதாரணக்கூட்டம்

நிகழும் மங்களகரமான சோபகிருது வருடம் சித்திரை திங்கள்-15. நாள்:-28.04.2023ம் தேதி வெள்ளி கிழமை நண்பகல் 12.00 மணியளவில் நகர்மன்ற கூட்ட அரங்கில் வைத்து நடைபெற்ற நகர்மன்ற சாதாரண கூட்டம்.

முன்னிலை:-திரு கா.கருணாநிதி
நகர்மன்ற தலைவர்

பொருள் எண் :-1

கோவில்பட்டி நகராட்சி பொறியியல் பிரிவு வாகன எண் TN 69 AV 5248ற்க்கு பழுதுகள் ஏற்பட்டுள்ளதால் பழுது பணிகளை சரிபார்க்கும் பணிக்கு ஆகும் செலவினத்தொகை ரூ.70,000/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

பொது நிதியில் பணி செய்திட மன்றம் அனுமதிக்கலாம்

<u>தீர்மானம் எண்</u>: 492

தீர்மானம்: அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண்:- 2

இந்நகராட்சியில் பொறியியல் பிரிவு வாகன எண் TN69AV5248வாகனத்திற்கு பழுது பணிகள் சரிபார்க்கும் பணிக்கு 13.04.2023 அன்று விலைப்புள்ளிகள் கீழ்கண்டவாறு பெறப்பட்டதில்,

1. NEW STAR AUTOMOBILES THIRUNELVELLI - 64,990/- குறைவு
2. SUNDARAM MOTORS THIRUNELVELLI - 67,050/- அதிகம்
3. GENERAL MOTORS PALAYAMKATAI - 69,980/- அதிகம்

வரப்பெற்றுள்ள மூனறு விலைப்புள்ளிகளில் குறைவாக விலைப்புள்ளி கொடுத்துள்ள NEW STAR AUTOMOBILES THIRUNELVELLI நிறுவனத்தின் விலைப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. பொது நிதியில் பணி செய்திட மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட பணியின் அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணிக்கு வேலை உத்திரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

<u>தீர்மானம் எண்</u>: 493

தீர்மானம்: அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண்:- 3

கோவில்பட்டி நகராட்சிக்குட்பட்ட தினசரி சந்தையை இடித்துவிட்டு புதியதாக கட்டும் பணி நடைபெற உள்ளதால் சந்தையில் உள்ள கடைகளுக்கான மின் இணைப்புகளை நிரந்திர மின்துண்டிப்புக்கான தொகை மற்றும் தற்போது வரை உள்ள மின்கட்டன நிலுவை தொகையினை பணிகளின் அவசியம் கருதி தோராய மதிப்பீட்டுத்தொகையை தெரிவிக்க 19.04.2023 அன்று கடித வாயிலாக அனுப்பப்பட்டது. அதன் படி இளநிலை மின் பொறியாளர், விநியோகம் நகர் கிழக்கு மின்வாரியம் கோவில்பட்டி அவர்களின் கடித நாள் 19.04.2023 ன்படி மொத்த மின் கட்டன நிலுவை தொகை ரூ6,62,000/- யை செலுத்திடவும் மற்றும் தோராய மதிப்பீட்டுத் தொகையை விட கூடுதலாக மதிப்பீட்டுத் தொகை செலுத்த வேண்டி இருப்பதால் அதற்கான தொகையினை செலுத்திட தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே மேற்கண்ட பணிக்கான மின்கட்டனத்தொகை ரூ6,62,000/- யை மின்சாரவாரியத்திற்கு செலுத்துவதற்கும் மேலும் கூடுதலாக வரப்படும் தொகையையும் மின்சாரவாரியத்திற்கு செலுத்துவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட பணியின் அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணிக்கு தொகை செலுத்தியதை மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானம் எண்: 494

தீர்மானம்: அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண்:- 4

கோவில்பட்டி நகராட்சி பகுதிகளில் உள்ள தெருநாய்களின் தொந்தரவு அதிகமாக இருப்பதாக பொதுமக்கள் மற்றும் நகா்மன்ற உறுப்பினா்களிடமிருந்து புகாா்கள் தொடா்ந்து வந்தவண்ணம் உள்ளதால் தெருநாய்களுக்கு தற்போது கருத்தடை அறுவைசிகிச்சை மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அரசாணை எண்.01 கால்நடை வளா்ப்பு மற்றும் மீன்வளத்துறை நாள்:17.03.2023ல் தெருநாய்களுக்கு கருத்தடை அறுவை சிகிச்சை மேற்கொள்ள ரூ.1650/- (ரூ.200+ரூ.1450) என நிா்ணயம் செய்யப்பட்டுள்ளதால் கோவில்பட்டி நகராட்சி பகுதிகளில் உள்ள தெருநாய்களுக்கு கருத்தடை அறுவை சிகிச்சையை விலங்குகள் நல வாரியத்தில் அனுமதி பெற்று, இந்நகராட்சியில் இப்பணியை ஏற்கனவே மேற்கொண்ட நாகா்கோவில் ஜீவ காருண்யா விலங்குகள் நல அறக்கட்டளை (Jeevakarunya Animal Welfare Charitable Trust) மூலம் தற்போதும் தெருநாய்களுக்கு கருத்தடை அறுவை சிகிச்சை செய்யவும் இதன் பொருட்டு ஏற்படும் உத்தேச செலவினத்தொகை ரூ.3.00 லட்சத்திற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம்

ந.க.எண்.1728/2023/எச்1

தீர்மானம் எண்: 495

தீர்மானம்: அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண்:- 5

**இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் உள்ள வாகனம் எண்.TN96B5193க்கு 23.05.2023 அன்று தகுதிசான்று காலம் முடிவடைவதால் தகுதிசான்று பெறுவதற்கு வாகனத்தில் உள்ள பழுதுகளை நீக்கம் செய்யும் பொருட்டு இந்நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதியின் பேரில் 24.04.2023ம் தேதி விலைப்புள்ளிகள் பெறப்பட்டது. இதில் வரப்பெற்றுள்ள மூன்று விலைப்புள்ளிகள் பின்வருமாறு**

| வ.எண். | நிறுவனத்தின் பெயர் | தொகை ரூ. |
|---|---|---|
| 1. | N.A.ரஹமத்துல்லா, ஆட்டோ மொபைல் ஒர்க்ஸ், எட்டையபுரம் ரோடு, கோவில்பட்டி. | 62,854/- |
| 2. | சித்திக் ஆட்டோ மொபைல் ஒர்க்ஸ், சர்வீர்ஸ் லூப்ரிகேசன், 51 எட்டையபுரம் ரோடு, கோவில்பட்டி. | 66,150/- |
| 3 | K.விஜயா மெக்கானிக் மற்றும் டின்கர் ஒர்க்ஸ் 61/7 எட்டையபுரம் ரோடு, கோவில்பட்டி. | 69,500/- |

வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி குறிப்பிட்டுள்ள **N.A.ரஹமத்துல்லா, ஆட்டோ மொபைல் ஒர்க்ஸ், எட்டையபுரம் ரோடு, கோவில்பட்டி.** விலைப்புள்ளியினை ஏற்று பணி உத்திரவு வழங்க அனுமதியும், இதற்கான செலவினம் ரூ.62,854/- க்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.1754/2023/எச்1

<u>தீர்மானம் எண்</u>: 496

தீர்மானம்: அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண்:- 6

இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் உள்ள வாகனம் எண்.TN96B5277க்கு 21.06.2023 அன்று தகுதிசான்று காலம் முடிவடைவதால் தகுதிசான்று பெறுவதற்கு வாகனத்தில் உள்ள பழுதுகளை நீக்கம் செய்யும் பொருட்டு இந்நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதியின் பேரில் 24.04.2023ம் தேதி விலைப்புள்ளிகள் பெறப்பட்டது. இதில் வரப்பெற்றுள்ள மூன்று விலைப்புள்ளிகள் பின்வருமாறு.

| வ.எண். | நிறுவனத்தின் பெயர் | தொகை ரூ. |
|---|---|---|
| 1. | சித்திக் ஆட்டோ மொபைல் ஒர்க்ஸ், சர்வீர்ஸ் லூப்ரிகேசன், 51 எட்டையபுரம் ரோடு, கோவில்பட்டி. | 60.600/- |
| 2. | N.A.ரஹமத்துல்லா, ஆட்டோ மொபைல் ஒர்க்ஸ், எட்டையபுரம் ரோடு, கோவில்பட்டி. | 58.912/- |
| 3 | K.விஜயா மெக்கானிக் மற்றும் டின்கர் ஒர்க்ஸ் 61/7 எட்டையபுரம் ரோடு, கோவில்பட்டி. | 64.800/- |

வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி குறிப்பிட்டுள்ள N.A.ரஹமத்துல்லா, ஆட்டோ மொபைல் ஒர்க்ஸ், எட்டையபுரம் ரோடு, கோவில்பட்டி. விலைப்புள்ளியினை ஏற்று பணி உத்திரவு வழங்க அனுமதியும், இதற்கான செலவினம் ரூ.58,912/- க்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு; மன்றம் அனுமதிக்கலாம்

ந.க.எண்.1755/2023/எச்1

<u>தீர்மானம் எண்</u>: 497

தீர்மானம்: அனுமதிக்கப்பட்டது.

# கோவில்பட்டி நகராட்சி
# நகர்மன்ற அவசரக் கூட்டம்

நிகழும் மங்களகரமான சோபகிருது வருடம் சித்திரை திங்கள்-15. நாள்:- 28.04.2023ம் தேதி வெள்ளி கிழமை நண்பகல் 12.30 மணியளவில் நகர்மன்ற கூட்ட அரங்கில் வைத்து நடைபெற்ற நகர்மன்ற அவசரக் கூட்டம்.

முன்னிலை:-திரு கா.கருணாநிதி
நகர்மன்ற தலைவர்

பொருள் எண் 1

கோவில்பட்டி நகராட்சிக்கு உட்பட்ட கூடுதல் பேருந்து நிலையத்தில் பேருந்து நுழைவு கட்டணம் வசூல் செய்யும் உரிமத்திற்கு பொதுஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி 24.03.2023 அன்று கோரப்பட்டது. பொதுஏலம் எவரும் முன்வரவில்லை. எனவே கீழ்க்காணும் விபரப்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளி வரப்பெற்றது.

| வ.எண். | குத்தகை கோரிய நபரின் பெயர் | தொகை ரூ. |
|---|---|---|
| 1. | திரு.பா.பாண்டியராஜ் த/பெ. பால்பாண்டியன் கயத்தார். | 315000/- |
| 2. | திரு.சி. சாய்ரஞ்சித் த/பெ. சின்னசாமி 1128/5, கயத்தார் ரோடு செட்டிகுறிச்சி. | 200000/- |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் முன்வைப்புத் தொகை செலுத்தப்பட்டுள்ளது. மேலும் மேற்படி குத்தகை இனங்களுக்கு பலமுறை ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரி ஏலம் எடுக்க யாரும் முன்வரவில்லை. அண்ணா பேருந்து நுழைவு கட்டணம் வசூல் செய்யும் உரிமம் சுமார் இரண்டு வருடங்களாக துறைமூலம வசூல் செய்யப்பட்டு வருகிறது. துறை மூலம் வசூல் செய்யும் பணிக்கு நிரந்தர பணியாளர்கள் இரண்டு நபர்கள் அமர்த்தி கொண்டு ஒரு நாளைக்கு ரூ.690/-வீதம் 30 நாட்களுக்கு ரூ.20700/-செலுத்தப்பட்டு வருடத்திற்கு 20700x12 = 248400/- நகராட்சி கருவூலகத்தில் செலுத்தப்பட்டு வருகிறது. மேற்படி வருமானத்தில் ஒரு நபருக்கு மாத ஊதியம் சுமார் 25000/- வீதம் 2 நபர்கள் மாதம் ரூ.50000/- வீதம் வருடத்திற்கு ரூ.600000/- இலட்சம் செலவு செய்யப்பட்டு வருகிறது. அதுபோக வருடத்திற்கு நுழைவுக் கட்டணம் ரசீது புத்தகம் அச்சிட்டு செலவு சுமார் 40000/-க்கு மேல் செலவு செய்யப்பட்டுள்ளது. ஆக மொத்தம் வருடத்திற்கு செலவுத் தொகை ரூ.640000/- செலவு ஆகிஉள்ளது. ஆகவே நகராட்சி நிதி இழப்பினை தவிர்க்கும் பொருட்டு திரு.பா.பாண்டியராஜ் என்பவர் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>:-

மன்றம் கூடுதல் ஏல தொகையை ஏற்று அனுமதி வழங்கலாம்.

ந.க.எண். 9856/2014/அ3

<u>தீர்மானம் எண்</u>: 498

தீர்மானம்: அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண் 2

கோவில்பட்டி நகராட்சிக்கு உட்பட்ட அறிஞர் அண்ணா பேருந்து நிலையம் பேருந்து நுழைவு கட்டணம் வசூல் செய்யும் உரிமத்திற்கு பொதுஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி 24.03.2023 அன்று கோரப்பட்டது. பொதுஏலம் எவரும் முன்வரவில்லை. எனவே கீழ்க்காணும் விபரப்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளி வரப்பெற்றது.

| வ.எண். | குத்தகை கோரிய நபரின் பெயர் | தொகை ரூ. |
|---|---|---|
| 1. | திரு.பா.பாண்டியராஜ்<br>த/பெ. பால்பாண்டியன்<br>கயத்தார். | 205000/- |
| 2. | திரு.சி. சாய்ரஞ்சித்<br>த/பெ. சின்னசாமி<br>1128/5, கயத்தார் ரோடு<br>செட்டிகுறிச்சி. | 100000/- |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் முன்வைப்புத் தொகை செலுத்தப்பட்டுள்ளது. மேலும் மேற்படி குத்தகை இனங்களுக்கு பலமுறை ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரி ஏலம் எடுக்க யாரும் முன்வரவில்லை. அண்ணா பேருந்து நுழைவு கட்டணம் வசூல் செய்யும் உரிமம் சுமார் இரண்டு வருடங்களாக துறைமூலம வசூல் செய்யப்பட்டு வருகிறது. துறை மூலம் வசூல் செய்யும் பணிக்கு நிரந்தர பணியாளர்கள் இரண்டு நபர்கள் அமர்த்தி கொண்டு ஒரு நாளைக்கு ரூ.768/-வீதம் 30 நாட்களுக்கு ரூ.23040/-செலுத்தப்பட்டு வருடத்திற்கு 23040x12 = 276480/- நகராட்சி கருவூலகத்தில் செலுத்தப்பட்டு வருகிறது. மேற்படி வருமானத்தில் ஒரு நபருக்கு மாத ஊதியம் சுமார் 25000/- வீதம் 2 நபர்கள் மாதம் ரூ.50000/- வீதம் வருடத்திற்கு ரூ.600000/- இலட்சம் செலவு செய்யப்பட்டு வருகிறது. அதுபோக வருடத்திற்கு நுழைவுக் கட்டணம் ரசீது புத்தகம் அச்சிட்டு செலவு சுமார் 40000/-க்கு மேல் செலவு செய்யப்பட்டுள்ளது. ஆக மொத்தம் வருடத்திற்கு செலவுத் தொகை ரூ.640000/- செலவு ஆகிஉள்ளது. ஆகவே நகராட்சி நிதி இழப்பினை தவிர்க்கும் பொருட்டு திரு.பா.பாண்டியராஜ் என்பவர் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு:</u>**- மன்றம் கூடுதல் ஏல தொகையை ஏற்று அனுமதி வழங்கலாம்..

ந.க.எண். 9856/2014/அ3

<u>தீர்மானம் எண்</u>: 499

தீர்மானம்: அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண் 3

கோவில்பட்டி நகராட்சியில் நமக்கு நாமே திட்டம் 2021-2022ன் கீழ் புதுகிராமம் மெயின் சாலையில் தார்ச்சாலை அமைக்கும் பணி ரூ.48.00/- இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்27519-48(1)-2021-P2 நாள் 27.02.2023ன் படி நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது, அதன்படி, மேற்கண்ட பணிக்கு Online மூலமாக 10.03.2023 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிக்ளின் விபரம்

| | | |
|---|---|---|
| 1. | K.நவாஸ்கான் | மதிப்பீட்டைவிட (--)0.06% குறைவு |
| 2. | PSR Construction | மதிப்பீட்டைவிட (+)0.13% அதிகம் |

வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட (--)0.06% குறைவாக வழங்கியுள்ள ஒப்பந்ததாரர் திரு. K.நவாஸ்கான் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. நமக்கு நாமே திட்டத்தில் பணி செய்திட மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணிக்கு வேலை உத்திரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

<u>தீர்மானம் எண்</u>: 500

தீர்மானம்: அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண் 4

கோவில்பட்டி நகராட்சியில் செயல்படுத்தப்பட்ட குடிநீர் அபிவிருத்தி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் புதிய பகிர்மான குழாய் பதிக்கப்படாத விரிவாக்கம் செய்யப்பட்ட பகுதிகளில் மற்றும் நெடுஞ்சாலைத்துறை சாலைகளில் 15வது மத்திய நிதி குழு மானியத்தின் கீழ் புதிய குடிநீர் பகிர்மான குழாய் பதிப்பதற்கு 5 பணிகளுக்கான திட்ட மதிப்பீடு கீழ்கண்டவாறு தயாரிக்கப்பட்டுள்ளது.

| வ.எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு தொகை (ரூ) இலட்சத்தில் |
|---|---|---|
| 1. | வார்டு எண்1 முதல் 18 வரை விரிவாக்கம் செய்யப்பட்ட பகுதிகளில் புதிய குடிநீர் பகிர்மான குழாய் பதிக்கும் பணி | 25.00 |
| 2. | வார்டு எண் 21,32 மற்றும் 35ல் உள்ள நெடுஞ்சாலைத்துறை சாலைகளில் புதிய குடிநீர் பகிர்மான குழாய் பதிக்கும் பணி | 24,80 |
| 3. | வார்டு எண் 4,15 மற்றும் 16ல் உள்ள நெடுஞ்சாலைத்துறை சாலைகளில் புதிய குடிநீர் பகிர்மான குழாய் பதிக்கும் பணி | 24.00 |
| 4. | வார்டு எண் 12 மற்றும் 14ல் உள்ள நெடுஞ்சாலைத்துறை சாலைகளில் புதிய குடிநீர் பகிர்மான குழாய் பதிக்கும் பணி | 24.00 |
| 5. | வார்டு எண் 21ல் உள்ள நெடுஞ்சாலைத்துறை சாலைகளில் புதிய குடிநீர் பகிர்மான குழாய் பதிக்கும் பணி | 18.50 |

மேற்கண்ட பணிகளை மேற்கொள்ள இந்நகர்மன்ற தீர்மான எண் 4216 நாள் 31.02.2020ன் படி மன்ற ஒப்புதல் பெறப்பட்டுள்ளது, அதன்படி, பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு பணிக்கு வேலை உத்திரவு வழங்கப்பட்டுள்ளது.

தற்போது வரிசை எண் 1ல் உள்ள பணிகள் மேற்கொள்ளப்படடுள்ள நிலையில் அப்பகுதிகளில் விடுப்பட்ட குடியிருப்பு பகுதிகளில் பகிர்மான குழாய் பதித்து புதிய திட்டத்தை

பயன்பாட்டிற்கு கொண்டு வரும் பொருட்டு வார்டு எண் 35 ஜோதிநகர், வார்டு எண் 31 சாஸ்திரி நகர், வார்டு எண் 29 ஸ்ரீராம் நகர், மந்தித்தோப்பு ரோடு கிழக்கு, வார்டு எண் 30 பாரதி நகர் மேட்டு தெரு, வார்டு எண் 24 சீனிவாச அக்ரஹார தெரு, வார்டு எண் 32 பசுவந்தனை ரோடு கிழக்கு, வார்டு எண் 34 கருணாநிதி நகர் மற்றும் வார்டு எண் 36 எட்டையபுரம் ரோடு, சுப்பிரமணியபுரம் ஆகிய பகுதிகளில் DMA முறைப்படி புதிய பகிர்மான குழாய் பதிக்கும் பணியினை மேற்கொண்டதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மன்றம் இப்பணியை 15வது மத்திய நிதிக்குழு மானியத்தின் கீழ் செய்ததற்கு அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.5787/2020/இ1

<u>தீர்மானம் எண்</u>: 501

தீர்மானம்: அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண் 5

கோவில்பட்டி நகராட்சியில் செயல்படுத்தப்பட்ட குடிநீர் அபிவிருத்தி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் புதிய பகிர்மான குழாய் பதிக்கப்படாத விரிவாக்கம் செய்யப்பட்ட பகுதிகளில் மற்றும் நெடுஞ்சாலைத்துறை சாலைகளில் 15வது மத்திய நிதி குழு மானியத்தின் கீழ் புதிய குடிநீர் பகிர்மான குழாய் பதிப்பதற்கு 5 பணிகளுக்கான திட்ட மதிப்பீடு கீழ்கண்டவாறு தயாரிக்கப்பட்டுள்ளது.

| வ.எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு தொகை (ரூ) இலட்சத்தில் |
|---|---|---|
| 1. | வார்டு எண்1 முதல் 18 வரை விரிவாக்கம் செய்யப்பட்ட பகுதிகளில் புதிய குடிநீர் பகிர்மான குழாய் பதிக்கும் பணி | 25.00 |
| 2. | வார்டு எண் 21,32 மற்றும் 35ல் உள்ள நெடுஞ்சாலைத்துறை சாலைகளில் புதிய குடிநீர் பகிர்மான குழாய் பதிக்கும் பணி | 24,80 |
| 3. | வார்டு எண் 4,15 மற்றும் 16ல் உள்ள நெடுஞ்சாலைத்துறை சாலைகளில் புதிய குடிநீர் பகிர்மான குழாய் பதிக்கும் பணி | 24.00 |
| 4. | வார்டு எண் 12 மற்றும் 14ல் உள்ள நெடுஞ்சாலைத்துறை சாலைகளில் புதிய குடிநீர் பகிர்மான குழாய் பதிக்கும் பணி | 24.00 |
| 5. | வார்டு எண் 21ல் உள்ள நெடுஞ்சாலைத்துறை சாலைகளில் புதிய குடிநீர் பகிர்மான குழாய் பதிக்கும் பணி | 18.50 |

மேற்கண்ட பணிகளை மேற்கொள்ள இந்நகர்மன்ற தீர்மான எண் 4216 நாள் 31.02.2020ன் படி மன்ற ஒப்புதல் பெறப்பட்டுள்ளது, அதன்படி, பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு பணிக்கு வேலை உத்திரவு வழங்கப்பட்டுள்ளது.

தற்போது, வரிசை எண் 5ல் உள்ள பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ள நிலையில் அப்பகுதிகளில் விடுப்பட்ட குடியிருப்பு பகுதிகளில் பகிர்மான குழாய் பதித்து புதிய திட்டத்தை பயன்பாட்டிற்கு கொண்டு வரும் பொருட்டு பசுவந்தனை மெயின் சாலை கிழக்கு மற்றும் மேற்கு பகுதி மற்றும் திருப்பதி காலனி ஆகிய பகுதிகளில் DMA முறைப்படி புதிய பகிர்மான குழாய் பதிக்கும் பணியினை மேற்கொண்டதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்.

2. மன்றம் இப்பணியை 15வது மத்திய நிதிக்குழு மானியத்தின் கீழ் செய்ததற்கு அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.5787/2020/இ1

<u>தீர்மானம் எண்</u>: 502

தீர்மானம்: அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண் 6

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.32945/2022/EA2-SWM-10 நாள்.10.01.2023 கடிதத்தின் படி கோவில்பட்டி நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் திடக்கழிவு மேலாண்மை பணிகளின் கீழ் வீடுகள் மற்றும் வணிக நிறுவனங்களில் சேகரமாகும் குப்பைகளை தேவையான துாய்மை பணியாளர்கள், தளவாடச்சாமான்கள் மற்றும் வாகனங்கள் பயன்படுத்தி மக்கும் குப்பை மற்றும் மக்காத குப்பை என தனித்தனியாக பிரித்து வாங்கி இதனை இந்நகராட்சியால் குறிப்பிடும் உரமாக்கும் மையம் (MCC), மறு சுழற்சி மையம் (RRC) மற்றும் கழிவு வளம் மீட்பு மையம் (MRF) ஆகிய இடங்களுக்கு கொண்டு வர ஒரு டன்னிற்கு ரூ.4,129.59/- என நிர்ணயம் செய்து நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்கண்ட, அனுமதியின் படி மூன்றாண்டுகளுக்கு ஒப்பந்தப்புள்ளி கோரி நிறுவனத்தை தேர்வு செய்து பணியினை மேற்கொள்வதற்கு உத்திரவிடப்பட்டுள்ளது.

திடக்கழிவு மேலாண்மை பணியினை மேற்கொள்வதற்கு கோவில்பட்டி நகராட்சிக்கு ஆண்டு ஒன்றுக்கு ரூ.599.40/- இலட்சம் செலவாகும் என்பதினால் இத்தொகையை பொது நிதி மற்றும் 15வது நிதிக்குழு மான்யம் (SWM Tied Grant) ஆகியவற்றிலிருந்து மூன்றாண்டுகளுக்கு செலவு மேற்கொள்ளவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, மேற்கண்ட பணிக்கு Online மூலமாக 24.03.2023 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ள ிகளின் விபரம்.

| | | | | |
|---|---|---|---|---|
| 1) | S.K.Selvi, Thoothukludi | --- | 4124/MT | மதிப்பீட்டைவிட (--) 0.14 % குறைவு |
| 2) | Exsernet, Madurai. | --- | 4127/MT | மதிப்பீட்டைவிட (--) 0.06 % குறைவு |

வரப்பெற்றுள்ள 2 ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட (--) 0.14 % குறைவாக வழங்கியுள்ள S.K.Selvi, Thoothukudi அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அ.கு:-

மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.302/2023/இ1

<u>தீர்மானம் எண்</u>: 503

தீர்மானம்: அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண் 7

கோவில்பட்டி நகராட்சி வார்டு எண் 1 நடராஜபுரம் மேற்கு 7வது தெருவில் உள்ள சாலை மிகவும் பழுதடைந்துள்ளதால் அதனை சரி செய்ய 1வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் அவர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே மேற்கண்ட பகுதியில் புதியதாக பேவர் பிளாக்

சாலை மற்றும் புதியதாக மழைநீர் வடிகால் அமைக்கும் பணிக்கு ரூ-14.50/- இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மேற்கண்ட பணியை பொது நிதியின் கீழ் செய்திட அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட பணியின் அவசியம் கருதி நகர் மன்ற தலைவர் அவர்களின் அனுமதி பெற்று பணிக்கு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை மன்றம் அனமதிக்கலாம்.

<u>தீர்மானம் எண்</u>: 504

தீர்மானம்: அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண் 8

கோவில்பட்டி நகராட்சி சீவலப்பேரி தலைமை நீரேற்று நிலையம் இளவேலங்கால் நீருந்து நிலையம் மற்றும் கோவில்பட்டி நீரேற்று நிலையம் ஆகிய பகுதிகளில் உள்ள மோட்டார்கள் மற்றும் குடிநீர் பணிகளை கண்காணிக்கும் பொருட்டு மூன்று இடங்களில் கண்காணிப்பு கேமராக்கள் பொருத்தும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.2.10/- இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மேற்கண்ட பணியை குடிநீர் நிதியின் கீழ் செய்திட மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட பணியின் அவசர அவசியம் கருதி நகர் மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணிக்கு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை மன்றம் அனுமதிக்கலாம்.

<u>தீர்மானம் எண்</u>: 505

தீர்மானம்: அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண் 9

கோவில்பட்டி நகராட்சி தலைமை நீரேற்று நிலையமான சீவலப்பேரியில் உள்ள கிணற்றின் மேல்புரம் ஆளிறங்கும் குழியை சீரமைக்கவும், கிணற்றுகளின் உள்புரம் மோட்டார் பொருத்துவதற்கு ஏதுவான சேனல் அமைக்கவும், கிணறுகளை தூர்வாரவும், கிணறுகளில் ஏற்பட்டுள்ள துளைகளை அடைக்கவும் மற்றும் கெப்பாசிட்டர் பொருத்தி PF சரி செய்யவும் போன்ற இதர பராமரிப்பு பணிகளை செய்யும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ-9.90/- இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மேற்கண்ட பணியை குடிநீர் நிதியின் கீழ் செய்திட மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட பணியின் அவசர அவசியம் கருதி நகர் மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணிக்கு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை மன்றம் அனுமதிக்கலாம்.

<u>தீர்மானம் எண்</u>: 506

தீர்மானம்: அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண் 10

கோவில்பட்டி நகராட்சி பகுதி மக்களுக்கு சீரான குடிநீர் விநியோகம் செய்யும் பொருட்டு முதற்கட்டமாக சீவலப்பேரி தலைமை நீரேற்று நிலையத்திற்கு 160KW/215HP மோட்டார் மற்றும் 6916LPM X 92MH உள்ள Horizontal Split Casting Centrifugal Pump 1 எண்ணம் Spare xauster வாங்கி பொருத்தும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ-26.00/- இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மேற்கண்ட பணியை குடிநீர் நிதியின் கீழ் செய்திட மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட பணியின் அவசர அவசியம் கருதி நகர் மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணிக்கு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை மன்றம் அனுமதிக்கலாம்.

<u>தீர்மானம் எண்</u>: 507

தீர்மானம்: அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண் 11

தமிழ்நாடு அரசிதழ் ஆணையின்படி, நகராட்சி நிர்வாக அரசு செயலாளர், நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருநெல்வேலி அவர்களின் அறிவுறையின்படி 2023-2024 நிதியாண்டில் சொத்துவரி 01.04.2023 முதல் 30.04.2023ம் தேதிக்குள் செலுத்தும் சொத்துவரி உரிமையாளர்களுக்கு ஊக்கத் தொகை 5% சதவிதம் வழங்கப்படும் என்று விபரத்தை பொதுமக்களுக்கு தெரியப்படுத்தும் விதமாக ஏதேனும் ஒரு விளம்பர நாளிதழில் விளம்பர அனுமதிக்கும், அதனால் ஏற்படும் உத்தேச செலவின தொகை ரூ.1,00,000/-க்கு மன்ற அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.1775/2023/அ1

<u>தீர்மானம் எண்</u>: 508

தீர்மானம்: அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண் 12

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 1, 2ல் உள்ள நடராஜபுரம் கிழக்கு, மேற்கு மற்றும் பசும்பொன் நகர் பகுதிகளில் குடிநீர் அபிவிருத்தி மேம்பாட்டு திட்டத்தில் விடுபட்ட குடிநீர் பகிர்மான குழாய் பதித்தல் மற்றும் குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் பதிக்கப்பட்ட பகிர்மான குழாயில் DMA முறையில் குடிநீர் விநியோகம் செய்யும் பொருட்டு விடுபட்ட தெருக்களில் 80mm, 100mm வால்வுகள் வழங்குதல் மற்றும் பொருத்தும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ18.00/- இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மன்றம் இப்பணியை குடிநீர் நிதியின் கீழ் செய்திட அனுமதிக்கலாம்

<u>தீர்மானம் எண்</u>: 509

தீர்மானம்: அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண் 13

கோவில்பட்டி நகராட்சியில் நகர்ப்புற சாலைகள் மேம்பாட்டு திட்டம் (NSMT) **2022–2023–**ன் கீழ் வ.உ.சி நகர் **6**வது தெரு - 137019R238, வ.உ.சி நகர் **1**வது தெரு- 137019S074, வ.உ.சி நகர் **5**வது தெரு - 137019L044, வ.உ.சி நகர் **2**ல் **2**வது குறுக்குத் தெரு - 137019S073, வ.உ.சி நகர் **2**ல் **3**வது குறுக்குத் தெரு - 137019R228, ஜே.ஜே நகர் **4**வது தெரு - 137007S029, ஜே.ஜே நகர் **3**வது தெரு - 137007S030, ஜே.ஜே நகர் **2**வது தெரு - 137007L009, டால்துரை பங்காளத்தெரு - 137017R207, செக்கடித்தெரு-1-137013R166, அம்பேத்கர் தெரு -137014R173, ஊரணித்தெரு-1-137014L030, ரோட்ரிக்ஸ் தெரு-137014L029, செக்கடி குறுக்குத்தெரு-1-137014L027, பங்களா **2**வது தெரு-137022R268, பஙகளாத்தெரு **2**வது குறுக்குத்தெரு-137022L062, பஙகளா 3வது தெரு-137022R266, பஙகளா 2வது தெரு-137022S086, பாரதிநகர் ரோடு -137033S121, காட்டு நாயக்கர் தெரு-137030S115, காட்டு நாயக்கர் **2**வது தெரு-137030L075, காட்டு நாயக்கர் **1**வது தெரு-137030S113, காட்டு நாயக்கர் **1**வது தெருவில் உள்ள **1**வது குறுக்குத்தெரு-137030L076, வீரவாஞ்சிநகர் வடக்கு குறுக்குத்தெரு -137028L068, வீரவாஞ்சிநகர் **9**வது குறுக்குத்தெருவில் **4**வது தெரு-137028R345, வ.உ.சி நகர் **1**வது தெரு-1-137019R226, கதிரேசன்கோவில் சாலை - 137027R332, வீரவாஞ்சிநகர் வடக்கு குறுக்குத்தெரு-2-137028S106, வள்ளுவர் நகர் **4**வது தெரு-137024S091, வள்ளுவர் நகர் **1**வது தெரு-137023R277, பகத்சிங தெரு-137020S080, ஸ்டாலின் தெரு-137025S094, ஸ்டாலின் காலனி குறுககுத்தெரு-137025R299, ஸ்டாலின் காலனி தெற்கு **1**வது குறுக்குத்தெரு-137025S095, ஸ்டாலின் தெரு தெற்கு **2**வது குறுக்குத்தெரு -137025S093, பாரதிநகர் ரோடு-137033R435, பாரதிநகர் **3**வது தெரு-137033S119 ஆகிய தெருக்களில் உள்ள பழுதடைந்த சிமெண்ட் சாலையை புதுப்பிக்கும் பணிக்கு அரசாணை எண்.**192** நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.**31.03.2023** (G.O (D) No.192 Dt.31.03.2023)–ன் படி மதிப்பீட்டுத் தொகை ரூ.**119.00/–** இலட்சத்திற்கு பணி மேற்கொள்வதற்கு நிர்வாக அனுமதி வழஙகப்பட்டுள்ளது. மேலும், தலைமை பொறியாளர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.**001/2022**/DO1 நாள்.**10.04.2023–**ன் படி தொழில்நுட்ப அனுமதி வழஙகப்பட்டுள்ளது. அதன்படி, மேற்கண்ட பணிக்கு **27.04.2023** அன்று Online மூலமாக ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் விபரம் கீழ்க்கண்டவாறு.

| | | | |
|---|---|---|---|
| **1)** | K. ராஜா முகமது | .. மதிப்பீட்டைவிட (–) | 0.01 % குறைவு |
| **2)** | PSR Construction | .. மதிப்பீட்டைவிட (+) | 0.04 % அதிகம் |

வரப்பெற்றுள்ள **2** ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட **(–) 0.01**% குறைவாக வழஙகியுள்ள K.ராஜா முகமது, சஙகரன்கோவில் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

ந.க.எண்**: 868/2023/**இ1

**அ.கு:–**

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்கண்ட பணியினை நகர்ப்புற சாலைகள் மேம்பாட்டு திட்டம் (NSMT) **2022–2023–**ன் கீழ் பணியினை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானம் எண்: 510

தீர்மானம்: அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண் 14

கோவில்பட்டி நகராட்சியில் நகர்ப்புற சாலைகள் மேம்பாட்டு திட்டம் (NSMT) **2022–2023–**ன் கீழ் அறிஞர் அண்ணா நகர் -137030R373, வெங்கடேஷ் நகர் மெயின் ரோடு-137027R321, கதிரேசன் கோவில் மெயின் ரோடு தெற்கு -137027R333, வெங்கடேஷ் நகர் மெயின் **1**வது தெரு -137027R340, அறிஞர் அண்ணா நகர் **3**வது தெரு -137027R325, சுப்பிரமணியபுரம் **2**வது மெயின் ரோடு-137036R492, சுப்பிரமணியபுரம் **2**வது தெரு-137036R493, சுப்பிரமணியபுரம் **2**வது மெயின் ரோடு-137036R509, ஜோதிநகர்-137035R484, ஜோதிநகர் **4**வது தெரு-137035R464, ஜோதிநகர் **2**வது தெரு-137035R474, பண்ணைத்தோட்டம் தெரு-137015R176, பாரதிநகர் ரோடு-137026R314, சீனிவாச அக்ரஹார தெரு-137017R209, தட்சிணாமூர்த்தி கோவில் தெரு-137017R208, நடராஜபுரம் கிழக்கு 7வது குறுக்குத்தெரு-137002R036, சிவாஜி நகர் கிழக்குத்தெரு-137007R119 ஆகிய தெருக்களில் தார்ச்சாலை அமைக்கும் பணிக்கு அரசாணை எண்.**192** நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.**31.03.2023** (G.O (D) No.192 Dt.31.03.2023)**–**ன் படி மதிப்பீட்டுத் தொகை ரூ.**53.00/–** இலட்சத்திற்கு பணி மேற்கொள்வதற்கு நிர்வாக அனுமதி வழஙகப்பட்டுள்ளது. மேலும், மண்டல செயற்பொறியாளர், திருநெல்வேலி அவர்களின் கடிதம் ந.க.எண்.**608/2023/**ஆ**1** நாள்.**11.04.2023–**ன் படி தொழில்நுட்ப அனுமதி வழஙகப்பட்டுள்ளது. அதன்படி, மேற்கண்ட பணிக்கு **27.04.2023** அன்று Online மூலமாக ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் விபரம் கீழ்க்கண்டவாறு.

| | | | |
|---|---|---|---|
| **1)** | K. ராஜா முகமது | .. மதிப்பீட்டைவிட (–) | 0.01 % குறைவு |
| **2)** | PSR Construction | .. மதிப்பீட்டைவிட (+) | 0.09 % அதிகம் |

வரப்பெற்றுள்ள **2** ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட **(–) 0.01**% குறைவாக வழஙகியுள்ள K.ராஜா முகமது, சஙகரன்கோவில் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

ந.க.எண்: **868/2023/**இ**1**

**<u>அ.கு:–</u>**

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்கண்ட பணியினை நகர்ப்புற சாலைகள் மேம்பாட்டு திட்டம் (NSMT) **2022–2023–**ன் கீழ் பணியினை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

<u>தீர்மானம் எண்</u>: 511

தீர்மானம்: அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண் 15

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.1 நடராஜபுரம் மேற்கு 7வது தெருவில் புதியதாக பேவர் பிளாக் சாலை மற்றும் வடிகால் அமைக்கும் பணிக்கு ரூ.14.50/- இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள இந்நகர்மன்ற தலைவர் அவர்களால் முன் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதன்படி, மேற்படி பணிக்கு 27.04.2023 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் விபரம்.

| | | | |
|---|---|---|---|
| 1) | செல்வம் | --- மதிப்பீட்டைவிட (--) | 0.02 % குறைவு |
| 2) | V.கிருஷ்ணமூர்த்தி | -- மதிப்பீட்டைவிட (--) | 0.00 % குறைவு |

வரப்பெற்றுள்ள 2 ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட (--) 0.02% குறைவாக வழங்கியுள்ள ஒப்பந்ததாரர் திரு.செல்வம் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அ.கு:-

நகராட்சி பொது நிதியிலிருந்து பணி செய்திட மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் எண்</u>**: 512

**தீர்மானம்**: **அனுமதிக்கப்பட்டது**.

**பொருள் எண்** 16

கோவில்பட்டி நகராட்சி சீவலப்பேரி தலைமை நீரேற்று நிலையம், இளவேலங்கால் நீருந்து நிலையம் மற்றும் கோவில்பட்டி நீரேற்று நிலையம் ஆகிய மூன்று இடங்களில் கண்காணிப்பு கேமராக்கள் பொருத்தும் பணிக்கு ரூ.2.10/- இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள இந்நகர்மன்ற தலைவர் அவர்களால் முன் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதன்படி, மேற்படி பணிக்கு 27.04.2023 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் விபரம்.

| | | | |
|---|---|---|---|
| 1) | P.மாரிமுத்துப்பாண்டியன் | --- மதிப்பீட்டைவிட (--) | 0.22 % குறைவு |
| 2) | H.முகமது இப்ராஹிம் | --- மதிப்பீட்டைவிட (--) | 0.00 % குறைவு |

வரப்பெற்றுள்ள 2 ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட (--) 0.22% குறைவாக வழங்கியுள்ள ஒப்பந்ததாரர் திரு.P.மாரிமுத்துப்பாண்டியன் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அ.கு:-

குடிநீர் அவசியம் கருத குடிநீர் நிதியிலிருந்து இப்பணியை செய்திட மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் எண்</u>**: 513

**தீர்மானம்**: **அனுமதிக்கப்பட்டது**.

**பொருள் எண்** 17

கோவில்பட்டி நகராட்சி சீவலப்பேரி தலைமை நீரேற்று நிலையத்தில் உள்ள கிணறுகளை சீரமைக்கவும், தூர்வாரவும் மற்றும் துளைகளை அடைக்கவும், சேனல் அமைக்கவும் மற்றும் கெப்பாசிட்டர் பொருத்தி PF சரிசெய்யவும் போன்ற இதர பராமரிப்பு பணிகளை செய்யும் பணிக்கு ரூ.9.90/- இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள இந்நகர்மன்ற தலைவர் அவர்களால் முன் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதன்படி, மேற்படி பணிக்கு 27.04.2023 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் விபரம்.

| | | | |
|---|---|---|---|
| 1) | P.மாரிமுத்துப்பாண்டியன் | --- மதிப்பீட்டைவிட (--) | 0.02 % குறைவு |
| 2) | H.முகமது இப்ராஹிம் | --- மதிப்பீட்டைவிட (--) | 0.00 % குறைவு |

வரப்பெற்றுள்ள 2 ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட (--) 0.02% குறைவாக வழங்கியுள்ள ஒப்பந்ததாரா் திரு.P.மாரிமுத்துப்பாண்டியன் அவா்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அ.கு:-

குடிநீர் அவசியம் கருத குடிநீர் நிதியிலிருந்து இப்பணியை செய்திட மன்றம் அனுமதிக்கலாம்..

**<u>தீர்மானம் எண்</u>**: 514

**தீர்மானம்**: **அனுமதிக்கப்பட்டது**.

**பொருள் எண்** 18

கோவில்பட்டி நகராட்சி பகுதி பொது மக்களுக்கு சீரான குடிநீா் விநியோகம் செய்யும் பொருட்டு சீவலப்பேரி தலைமை நீரேற்று நிலையத்திற்கு 160KW/215HP மோட்டாா் மற்றும் 6916LPM X 92MH உள்ள Horizontal split casing centrifugal Pump மற்றும் மோட்டார் 1எண்ணம் வாங்கி பொருத்தும் பணிக்கு ரூ.26.00/- இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள இந்நகா்மன்ற தலைவா் அவா்களால் முன் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதன்படி, மேற்படி பணிக்கு 27.04.2023 அன்று Online ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் விபரம்.

| | | | |
|---|---|---|---|
| 1) | P.மாரிமுத்துப்பாண்டியன் | --- மதிப்பீட்டைவிட (--) | மதிப்பீட்டு விலை விகிதம் |
| 2) | H.முகமது இப்ராஹிம் | --- மதிப்பீட்டைவிட (+) | 0.05 % குறைவு |

வரப்பெற்றுள்ள 2 ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலை விகிதம் கொடுத்துள்ள ஒப்பந்ததாரா் திரு.P.மாரிமுத்துப்பாண்டியன் அவா்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அ.கு:-

குடிநீர் அவசியம் கருத குடிநீர் நிதியிலிருந்து இப்பணியை செய்திட மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் எண்</u>**: 515

**தீர்மானம்**: **அனுமதிக்கப்பட்டது**.